01.04.2024 பக்கம் எண்.328/2023

எஸ்.டி.சி.3062/2023

எ.சா.1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி

பாரத் கேப்பிட்டல் நிறுவனம் எதிரியின் பெயரில் பராமரித்து வரும் 2013 முதல் 2014 வரையிலான பேரேடுகள் எ.சா.ஆ.1. நான் ஏலத்தொகை செலுத்தியதற்கான ரசீதுகள் 5 எண்ணிக்கை எ.சா.ஆ.2. புகார்தாரர் எனக்கு எழுதிக்கொடுத்த ரசீது எ.சா.ஆ.3. சி.சி 723/2017 ல் கரூர் விரைவு நீதிமன்றத்தில் புகார்தாரர் இறந்துபோன சுப்பிரமணியை குறுக்கு விசாரணை செய்த சாட்சியம் எ.சா.ஆ.4 (எதிர்மனுதாரர் சான்றாவணம் 2,3 ரசீதுகள் பாரத் கேப்பிட்டல்ஸ் ஆல் வழங்கப்படவில்லை என்று புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது).

குறுக்கு விசாரணை (புகார்தாரர் தரப்பில்)

எனக்கு புகார்தாரரை பத்து வருடமாக தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் கோகுலம் சிட்சில் மேலாளராக இருந்தேன் என்றால் சரிதான். நான் அந்த வேலையிலிருந்து வெளியேறிய பின்பு ஐஸ்வர்யம் சிட்ஸ் என்ற பெயரில் சிட்ஸ் நிறுவனம் நடத்திவந்தேன் என்றால் சரிதான். ஐஸ்வர்யம் சிட்ஸ் சம்மந்தமாக உங்கள் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாரத் கேப்பிட்டல் என்ற நிறுவனத்தில் நான் இறந்துபோன சுப்பிரமணி மற்றும் சிலர் பங்குதாரர்களாக இருந்தோம் என்றால் சரிதான். மேற்படி நிறுவனம் சட்டப்படி கலைக்கபடவில்லை என்றும் இன்று வரை இயங்கி வருகிறது என்றால் எனக்கு தெரியாது. 2015 மார்ச் முதல் நான் விலகிக்கொள்கிறேன் என்று விலகல் பத்திரத்தில் என்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். ஒரு பங்கு நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் விலகினால் என்னென்ன விதிமுறைகள் உள்ளது என்றும் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2013 மற்றும் 2014 க்குரிய லெட்ஜர் என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ம் தேதியில் தான் நிதியாண்டு கணக்கு முடிவு பெறும் என்றால் சரிதான். 2014 மற்றும் 2015 க்கான நிதியாண்டு கணக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டு ஆண்டுகள் மட்டும்தான்

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

பைனான்ஸ் நடந்தது. 2015 ம் ஆண்டு மார்ச் தொடக்கத்திலே பிரச்சனை நடந்து விட்டது. சுப்பிமணியிடம் கணக்கு வழக்குகளை ஒப்படைக்க சொல்லி கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பங்குதாரர்கள் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பங்குதாரர்களுக்குள் பேசி பிரச்சனை முடியாததால் அதன் பின்னிட்டும் நான் நிறுவனத்தின் கணக்கு வழக்குகளையும், எனது முதலீட்டு கணக்கையும், மற்றும் நிறுவனத்தை கலைக்கக்கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2014 மற்றும் 2015 க்கான பாரத் கேப்பிட்டல் நிறுவனத்தில் பேரேட்டின்படி எனக்கு எந்தவிதமான தொகையும் தரவேண்டியது இல்லை என்று தெரிந்துகொண்டு தான் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி 4 லட்சம் முதலீடு மற்றும் 6 லட்சம் டெபாசிட் சுப்பிரமணி வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் பாரத் கேப்பிட்டல்ஸ் நிறுவனம் சார்பாக சுப்பிரமணி எந்தவித ஏல சீட்டும் நடத்தி வந்ததாக ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2015 ல் சுப்பிரமணி செய்து வந்த வரவு செலவு சரியில்லாததால் நான் கணக்கு கேட்டதாகவும், அதற்கு என்னை சுப்பிரமணி விலகிக்கொள்ள சொன்னதாகவும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட வகையில் கடன் இருப்பதால் நான் விலகிக்கொள்வதாக சுப்பிரமணியிடம் நான் கேள்விகள் கேட்டுள்ளேனா என்றால் சரியல்ல. எனக்கு கடன் அதிமாக இருந்ததால் வாங்கிய பணத்தை கட்டமுடியவில்லை என்பதால் நான் விலகிக்கொள்கிறேன் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சுப்பிரமணியிடம் குறுக்கு விசாரணையில் வேலுச்சாமிக்கும், புகார்தாரருக்கும் எனக்கும் எந்தவிதமான மன வருத்தமும் இல்லை என்று கேள்விகன் கேட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கணக்கு கேட்டதால் விரோதம் இல்லை என சுப்பிரமணி குறுக்கு விசாரணையில் மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரிடம் மூன்று வெவ்வேறு தேதிகளில் புகார் மனுக்களில் கண்டுள்ள காசோலை தொகைகளை பெற்றுக்கொண்டு மேற்படி தொகைகளை தீர்ப்பதற்காக தங்களால் இறந்துபோன புகார்தாரருக்கு வழக்கு காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு காசோலைகள் அனைத்தும் பாரத் கேப்பிட்டல் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டவை என்பது தான் வழக்கு என்றால் சரியல்ல. சீட்டுத்தொகை செக்கியூரிட்டாக்காக கொடுக்கப்பட்டது. இந்த வழக்கு காசோலைகள் அனைத்தும் சீட்டுக்காக கொடுக்கப்பட்ட காசோலைகள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன சுப்பிரமணியிடம் சீட்டுப்போட்ட வகையில்

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

சீட்டுப்பணம் அனைத்தும் நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். நான் சொல்லி சீட்டுபோட்டவர்கள் அனைவரும் பணம் பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். சீட்டு போட்டு முடித்த பின்பு செக்கியுரிட்டிக்காக கொடுத்த காசோலையை திருப்பி கொடுக்கவில்லையென வழக்கறிஞர் வைத்து அறிவிப்போ அல்லது காவல்நிலையத்தில் புகாரோ கொடுத்துள்ளேன என்றால் இல்லை. நான் வாய்மொழியாக கேட்டுள்ளேன். என்னிடமிருந்து இறந்துபோன சுப்பிரமணி பொறுப்பிற்காக எந்த ஒரு காசோலை பெற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். சுப்பிரமணியின் நெருங்கிய நண்பர் என்ற முறையில் மூன்று வெவ்வேறு தேதிகளில் கடன்களை பெற்றுக்கொண்டு மேற்படி கடன் தொகையை தீர்ப்பதற்காக கடன் பெற்ற அன்றே காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலைகள் அனைத்தும் சட்டப்படியான கடன் தொகை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பாரத் கேப்பிட்டல் நிறுவனம் நாளது தேதி வரை இயங்கி கொண்டிருக்கிறது என்றும், நான் விலகிவிட்டதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் பாரத் கேப்பிட்டல் நிறுவனத்திலிருந்து விலகியிருந்தால் விலகல் சம்மந்தமாக பேப்பர் விளம்பரமோ, நிறுவன பதிவாளரிடம் விலகல் சம்மந்தமான பதிவு செய்தும், அரசிதழில் விளம்பரம் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சீட்டு போட்ட வகையில் சுப்பிரமணி எனக்கு 7 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது சம்மந்தமாக நான் எந்தவிதமான அறிவிப்பும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்பிரமணி எனக்கு 7 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்வது கற்பனையான சங்கதி என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலைகள் இறந்துபோன புகார்தாரரிடம் பெற்ற கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட என்று சொன்னால் சரியல்ல. காசோலை திரும்பியது சம்மந்தமா நான் தக்கபடி தண்டிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.